# Tamil Nadu Electricity Board Engineers' Sangam

## தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்

Regd. No. 124/MDS (Recognised)
(Affiliated to All India Federation of Power Diploma Engineers)
144, Electricity Avenue, Anna Salai, Chennai - 600 002.
44, Ramasamy Garden Street, Royapetah, Chennai - 600 014.
Phone : 28521968, E-mail : tnebes@yahoo.co.in

| PRESIDENT | GENERAL SECRETARY | TREASURER |
|---|---|---|
| **Er. A.ANTONYPADOVARAJ** | **Er. V. ASHOKKUMAR** | **Er. R.BADRINARAYANAN** |
| 94438 72166 | 94442 13621 | 96001 49791 |


பெறுதல்

**மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள்,**
தமிழ்நாடு அரசு,
சென்னை–600 002.

க.எண்.பொ.செ./த.மி.வா.பொறியாளர் சங்கம்/கோ.எண்.1/ தீர்மானம் எண்.16 /தேதி 1.12.2016.

ஐயா,

பொருள்: தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம் – 50வது மாநில பொதுக்குழு மற்றும் மாநில செயற்குழு தீர்மானம் – தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு அரசுத்துறைக்கு இணையாக சம்பளம் வழங்கிட வேண்டுதல்– தொடர்பாக.

பார்வை: 1. மாநில பொதுக்குழு தீர்மானம் கடித நாள் 21.07.2016.
2. மாநில செயற்குழு நாள் 26.11.2016.

தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கத்தின் 50வது மாநில பொதுக்குழு கூட்டத்தில் இயற்றப்பட்ட தீர்மானத்தின் மீது வாரியம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டி மாநில செயற்குழு கூட்டத்தில் மீண்டும் வலியுறுத்தப்பட்டு தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது.

**தீர்மானம்–16**

தமிழக அரசில் பணிபுரியும் தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தைவிட தமிழ்நாடு மின்சார வாரிய தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு குறைவான சம்பளம் வழங்கப்படுகிறது. இதனை சரிசெய்திட அரசும், வாரியமும் பல முறை உறுதி அளித்துள்ளது. ஊதிய உயர்வு பேச்சுவார்த்தையில் தொழில்நுட்ப உதவியாளருக்கு அரசுத்துறைக்கு இணையாக ஊதியம் 6 மாதங்களுக்குள் பரிசீலித்து வழங்கிட ஏற்றுக்கொண்டு 1998ல் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

03.10.2009 அன்று நடைபெற்ற பொறியாளர் சங்க 5வது மாநில மாநாட்டில் அன்றைய மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் மின்சார வாரிய தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு தமிழக அரசுத்துறை தொழில்நுட்ப உதவியாளர்கள் சம்பளம் விரைவில்

# Tamil Nadu Electricity Board Engineers' Sangam

வழங்கப்படும் என்று மேடையிலேயே தெரிவித்தார்கள். நாளிதழ்கள், தொலைக்காட்சிகளிலும் செய்திகள் வெளியிடப்பட்டது.

**09.01.2014 அன்று ஊதிய உயர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்படும்போது மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு ஏற்கனவே ஏற்றுக்கொண்டிபடி அரசுத்துறை சம்பளம் வழங்கிட நடவடிக்கை மேற்கொண்டிட வாரியத்தலைவர் அவர்களிடம் அறிவுறுத்தியுள்ளார்கள்.**

கடைசியாக **23.02.2016** அன்று நடைபெற்ற பேச்சுவார்த்தையில் வாரியத்தலைவர் அவர்கள் தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு அரசுத்துறை ஊதியம் வழங்கிட ஊதிய உயர்வு வேலைப்பளு குழுவிற்கு பரிந்துரைத்து உத்தரவு வழங்கியுள்ளார்கள். ஊதிய உயர்வு ஒப்பந்தத்திற்கு பின்னர் வேறு பல பணியாளர்களுக்கு வாரியம் பணிநிலைகளை உயர்த்தியும் கூடுதல் ஊதியம் வழங்கியும் உள்ளது. **ஆனால் தொடர்ந்து பல ஆண்டுகளாக வாரியமும், அரசும் ஏற்றுக்கொண்ட பின்னரும் தொழில்நுட்ப உதவியாளர் –அரசுத்துறைக்கு இணையான சம்பளம் வழங்காமல் தாமதித்து வருகிறது.**

எனவே, அரசும், வாரியமும் ஏற்றுக்கொண்டபடி வாரியத் தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு அரசுத்துறைக்கு **இணையாக** சம்பளம் (அடிப்படை சம்பளம் ரூ.9300–34800, தர ஊதியம் ரூ.4200–அரசு ஆணை நாள் 24.09.2012) வழங்கிடவும், பட்டயப் பொறியாளர்களுக்கு **நியாயம் வழங்கி** பாரபட்சமின்றி வாரியம் நடந்து கொள்ளவும் மாண்புமிகு மின்துறை **அமைச்சர் அவர்களையும், வாரியத்தையும்** மீண்டும் வலியுறுத்தி **கேட்டுக்கொள்கிறோம்.**

நன்றி,

தங்கள் உண்மையுள்ள,

( வி. அசோக்குமார் ) 03/12/16
பொதுச் செயலாளர்.

<u>நகல்</u>

தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர் / த.மி.உ.மற்றும் பகிர்மான கழகம்.
செயலாளர் / த.மி.உ.மற்றும் ப.கழகம்.
தலைமைப் பொறியாளர் / பணியமைப்பு / த.மி.உ.மற்றும் பகிர்மான கழகம்.